# மித்ரனின் SPM தேர்வுத் தளம்

நல்லார்க்கினியாள்

வணக்கம் மாணவர்களே.

உங்கள் அனைவரையும் மீண்டும் சந்திப்பதில் மகிழ்ச்சி. இன்று நாம், எஸ். பி. எம். தமிழ்மொழி தாள் 1-இல் பிரிவு ஆ-இல் இடம்பெறும் **வாதக் கட்டுரையை** எழுதும் முறைபற்றி விளக்கமாக அறியவுள்ளோம்.

**வாதக் கட்டுரை**

வாதக் கட்டுரை என்பது கொடுக்கப்படும் தலைப்பை மாணவர்கள் **சார்ந்து அல்லது மறுத்து** தர்க்க மொழிநடையில் எழுத வேண்டும்.

**இத்தலைப்பை அணுகும் முறைகள்**

- மாணவர்கள், கொடுக்கப்படும் தலைப்புத் தொடர்பான கருத்துகளைச் **சார்ந்து அல்லது மறுத்து,** போதுமான ஆதாரங்களையும் கூற்றுகளையும் முன் வைத்தும் தம் கருத்தே சரி எனத் தொடக்கம் முதல் இறுதி வரை உறுதியாக நிலைநிறுத்தி வாதம் செய்யும் வகையில் இக்கட்டுரையை எழுத வேண்டும்.
- முதலில், தலைப்பைப் படித்தவுடன் அந்தத் தலைப்பை ஆதரித்து (சார்ந்து / ஒட்டி) எழுதுவதா அல்லது நிராகரித்து (எதிர்த்து / வெட்டி) எழுதுவதா என்பதை மாணவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- பிறகு, தலைப்பைச் **சார்ந்து அல்லது மறுத்து** எழுதுவதா என்ற தங்களின் **நிலைப்பாட்டை** முன்னுரையின் முடிவில் வலியுறுத்தி எழுத வேண்டும்.
- வாதக் கட்டுரையை முன்னுரை, கருத்து ,முடிவுரை என்ற அடிப்படையில் எழுத வேண்டும்.
- கருத்துகளை வாதிக்கும் போது வாதத்தன்மை கொண்ட சொற்களைப் பயன்படுத்த வேண்டும்.

கட்டுரையில் வாதத் தன்மையை வெளிப்படுத்தும் சில சொற்றொடர்கள் :

**தலைப்பை ஆதரிக்கும் வாதம் (சார்ந்து / ஒட்டி)**

**ஆதரிக்கும் சொற்றொடர்கள்**

- ...என் கருத்தே உறுதியானது.
- ...கிஞ்சிற்றும் ஐயமில்லை.
- ...சந்தேகமே இல்லை.
- ...உண்மை தெளிவாகத் தெரிகின்றது.
- ...திண்ணமாகக் கூறலாம்.
- ...சந்தேகமின்றி நிரூபிக்க முடியும்.
- ...மறுத்துப் பேச இயலாது.
- ...ஐயம் கொள்ள முடியாது.
- ...எனும் கருத்து மட்டுமே இறுதியானது.
- ...கட்டாயம் மறுக்க முடியாது.
- ...ஏற்புடைய பிற சொற்றொடர்கள்

**தலைப்பை நிராகரிக்கும் வாதம் (எதிர்வாதம் / வெட்டி)**

**நிராகரிக்கும் சொற்றொடர்கள்**

- ...அர்த்தமற்ற வாதம்.
- ...ஏற்றுக் கொள்ள முடியாது.
- ...பகற்கனவு காண்பது போல் உள்ளது.
- ...இல்லாத கருத்தைப் பொய்யாகச் சொல்லக்கூடாது.
- ...சொன்னால் மட்டும் போதுமா.
- ...பிறரைக் குழப்ப வேண்டாம்.
- ...ஏமாற்றக் கூடாது.
- ...நேர்மாறான தகவல்களைத் தரக்கூடாது.
- ...ஏற்புடைய பிற சொற்றொடர்கள்


© 2020 Penerbitan Vetri Mayil (M) Sdn. Bhd.

**கவனத்தில் கொள்க!**

- வாதக் கட்டுரையில் படிப்போரைப் புண்படுத்தும் வகையிலோ அவமதிக்கும் வகையிலோ கருத்துகளை முன் வைக்கக் கூடாது.
- இஃது ஒரு வாதக் கட்டுரை என்பதால் முன்னுரையில் சபை வணக்கம், சபை விளிப்பு போன்ற கூறுகள் தேவையில்லை.
- இது வாதக் கட்டுரை என்பதால் கொடுக்கப்படும் தலைப்பைச் சார்ந்தும் மறுத்தும் என்று இரு பக்கமும் கருத்துகளை முன்வைத்து இக்கட்டுரையை எழுதக் கூடாது என்பதை மாணவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். மாறாக ஒரு தலைப்பைச் சார்ந்து அல்லது மறுத்து மட்டுமே எழுத வேண்டும்

**வாதக் கட்டுரைக்கான மாதிரி முன்னுரை**

**தலைப்பு :** **நாட்டு மக்களின் அயராத உழைப்பு ஒன்றே நாட்டை முன்னேற்றும்.**

**இத்தலைப்பை வாதித்து ஒரு கட்டுரை எழுதுக**

**எடுத்துக்காட்டு** 1

**முன்னுரை** (ஆதரித்தல்)

'உழைப்பே உயர்வைத் தரும்' என்பது பழமொழி. நாட்டு மக்களின் உழைப்பினாலே இன்று எல்லா நாடுகளும் முன்னேறி உள்ளன. நல்ல மண் வளமும் அறிவு வளமும் நாட்டில் இருந்தாலும் மக்கள் உழைக்காவிட்டால் நாடு முன்னேறாது. எனவே, மக்களின் உழைப்பே நாட்டுக்கு உயர்வைத் தரும் என்பதே உண்மை. உழைக்கும் மக்களின் எண்ணிக்கையே ஒவ்வொரு நாட்டிலும் அதிகம். அவர்கள் உழைத்ததால்தான் பல நாடுகள் உயர்ந்த நிலையை அடைந்துள்ளன. தனிமனித முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றமாதலால் தனிமனிதன் சோம்பி இருத்தல் கூடாது. அவ்வாறு சோம்பி இருப்பானாயின் தன் முன்னேற்றத்தை மட்டுமன்றித் தன் குடும்ப முன்னேற்றத்தையும் அவன் பாதிப்படையச் செய்வான். எனவே, ஒரு நாட்டு மக்களின் அயராத உழைப்பு ஒன்றே அந்நாட்டை முன்னேற்றமடையச் செய்கிறது என்றால் மிகையாகாது.

**எடுத்துக்காட்டு** 2

**முன்னுரை** (நிராகரித்தல்)

மக்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் இல்லாத போது நாடு முன்னேறிவிட்டது என்று பெருமைப்பட்டுக் கொள்ள முடியாது. மக்களின் உழைப்பின் பலனில் பெரும்பகுதி அவர்களையே சென்றடைய வேண்டும். அப்பலன் அவர்களைச் சென்றடையாதபோது அவர்களின் உழைப்பால் நாடு முன்னேறிவிட்டது என்று கூறுவது பொருளற்றதாகவே இருக்கும். மக்களின் உழைப்பு மட்டும் நாட்டை முன்னேற்றிவிடும் என்று கூறுவது பகற்கனவு காண்பதற்கு ஒப்பாகும். இன்று எல்லா நாடுகளிலும் மக்கள் உழைக்கிறார்கள். ஆனால், எல்லா நாடுகளும் அந்த உழைப்பினால் முன்னேறி இருக்கின்றன என்று கூறுதல் முடியாது. ஆப்பிரிக்க நாடுகள் பலவற்றுள் மக்கள் மாடாக உழைத்தும் இன்னும் பசி, பட்டினியிலேயே கிடந்து உழலுகின்றனர். எனவே, வெறும் உழைப்பு மட்டும் ஒரு நாட்டை முன்னேற்றி விடாது என்பது திண்ணமாகும்.

 © 2020 Penerbitan Vetri Mayil (M) Sdn. Bhd.

**கருத்துகள்**

- கருத்துகள் யாவும் தலைப்பை ஒட்டி அல்லது மறுத்து இருத்தல் வேண்டும்
- மாணவர்களின் **கருத்துகள்** யாவும் நடைமுறை வாழ்வியல் கூறுகளாக அமைதல் வேண்டும்.
- அவை கீழ்க்காணும் கூறுகளைத் தொடர்புபடுத்தி எழுதுவது சிறப்பாக அமையும்.
  - தனிமனிதன்
  - குடும்பம்
  - சமுதாயம்
  - நாடு
  - உலகம்
- கருத்துகள்/ஏடல்கள்(idea) முதிர்ச்சியாகவும் ஏரணத்தன்மையுடனும் (logik) இருக்க வேண்டும்.
- மொழியணிகள்/செய்யுளின் பயன்பாடு இருப்பது நன்று. இவை கட்டுரைக்கு மேலும் மெருகூட்டும்.
- கட்டுரைக்கு மொழியாளுமையும் மிக முக்கியமாகும். அதாவது சாதாரண மொழியில் எழுதாமல் தரமான மொழியில் கட்டுரையைப் படைத்தல் வேண்டும்.
- கட்டுரையில் பயன்படுத்தும் சொற்கள் பொருத்தமான துறைசார்மொழியாகவும் வாதத்தன்மை கொண்டதாகவும் இருப்பது நன்று.
- குறைந்தது 5 கருத்துகள் சொல்லப்பட வேண்டும்.

**கருத்தை விவரித்து எழுதும் போது ஒரு பத்தியில் இருக்க வேண்டிய கூறுகள்:**

- தலைப்புத் தொடர்பான முதன்மை/முக்கியக் கருத்து
- முதன்மை/முக்கியக் கருத்தை விவரித்து எழுதத் துணைக் கருத்துகள்
- துணைக் கருத்துகளை மேலும் விளக்குவதற்கான எடுத்துக்காட்டுகள்/ சான்றுகள்
- வாதச் சொற்களின் பயன்பாடு
- முக்கியக் கருத்து/துணைக்கருத்துக்குப் பொருத்தமான மொழியணிகள்/திருக்குறள்/செய்யுள்/பொன்மொழி/பாடல்கள்/அறிஞர்களின் சிந்தனைத் துளிகள்
- கருத்தை மீண்டும் வலியுறுத்தும் இறுதி வாக்கியம் (Penegasan)

**பயிற்சி 1**

**தலைப்பு :**

**பெண்கள் வேலைக்குச் செல்வதால் வளமான குடும்பத்தை உருவாக்கலாம்.** இத்தலைப்பை வாதித்து 300 சொற்களில் ஒரு கட்டுரை எழுதுக

ஆதரித்து அல்லது நிராகரித்து எழுத வேண்டும்.

ஒவ்வொரு கருத்தினையும் விரிவாக வாதித்து விளக்கி எழுத வேண்டும்.

 © 2020 Penerbitan Vetri Mayil (M) Sdn. Bhd.

**தமிழ்மொழி தாள் 2**
**பிரிவு ஆ : கேள்வி எண் 15**

மாணவர்கள் கொடுக்கப்பட்டுள்ள கவிதையை வாசித்துச் சொந்த மொழிநடையில் விளக்கம் எழுத வேண்டும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்வியையும் விடையையும் ஆராய்வோம்.

**கேள்வி 15 கீழே கொடுக்கப்பட்டுள்ள கவிதையை வாசித்து, உமது சொந்த மொழி நடையில் விளக்கம் எழுதுக.**

## நாளை உனக்கில்லை!

உழைப்பதற்குப் போதுமெனும் உடல்வலிமை யிருந்தும்
ஓடோடிப் பணிசெய்யத் தயக்கந்தான் ஏனோ?
பிழைப்பதற்குப் பணிதேடி வேறுநாட்டார் நுழைந்தே
பேரளவு தொழில்களிலே உழைக்கின்றா ரிங்கே?
தழைப்பதற்கோ உனக்கிங்கே வாய்ப்புக்க ளமைந்தும்
தறுதலைபோல் சுற்றுகின்றாய்! பொறுப்பேது மில்லை!
அழைப்பதற்கே ஆள்வருவார் என்றிங்கே நினைத்தால்
அடிப்படையே யில்லாமல் உன் எண்ணம் தோற்கும்!

**- கவிஞர் பெ.மு. இளம்வழுதி**

**நன்றி : மலேசியத் தேர்வு வாரியம்**

இதற்கான பதிலை 2 பத்திகளில் எழுத வேண்டும்.

மலேசியாவில் வாழும் மக்களின் மனப்போக்கைப் பற்றிய கவிதை இது.

இந்தக் கவிதைக்கு முன்னுரையோ முடிவுரையோ எழுதத் தேவையில்லை.

நேரடியாகக் கவிதையின் பொருள் விளக்கத்திற்கு வந்து விடலாம். கவிஞரின் பெயரைக் கொண்டு இந்த விளக்கத்தைத் தொடங்கலாம்.

விளக்கத்தை ஒவ்வொரு வரியாகவும் எழுதலாம் அல்லது ஒவ்வொரு பத்தியாகவும் எழுதலாம்.

**மாதிரி விடை**

கவிஞர் மலேசிய நாட்டில் வாழும் மக்களின் போக்கினைக் குறித்து எழுதியுள்ளார். மலேசியாவில் வாழும் இந்த மண்ணிற்குச் சொந்தக்காரர்களான மக்கள், உழைப்பதற்குப் போதுமான உடல் வலிமை பெற்றிருந்தும் சுறுசுறுப்பாக ஓடியாடி வேலை செய்யத் தயக்கம் காட்டுவது ஏனோ என்றும், இந்த மண்ணிற்குப் பிழைப்பைப் தேடி வந்த வெளி நாட்டவர் பெருமளவு தொழில்களைத் தேடி ஓய்வில்லாமல் இங்கு உழைக்கின்றனர்.

இங்குள்ள இளைய தலைமுறையினரோ சிறப்பான முறையில் செழுமையாக வாழப் பல வாய்ப்புகள் அமைந்தும், பொறுப்பில்லாமல் தறுதலைபோல் சுற்றிக் கொண்டிருக்கின்றனர். அழைத்தவுடன் வருவதற்கு யார் வருவார் இனி என்ற எண்ணம் சிறிது தோன்றினாலும் எந்த அடிப்படையும் இல்லாமலே அவருடைய எண்ணமானது தோற்குமென்கிறார் கவிஞர் பெ.மு. இளம்வழுதி.

 © 2020 Penerbitan Vetri Mayil (M) Sdn. Bhd.

## கேள்வி 15

### பயிற்சி 1

கீழே கொடுக்கப்பட்டுள்ள கவிதையை வாசித்து, உமது சொந்த மொழிநடையில் விளக்கம் எழுதுக.

நீ தேடும் சிகரம் தூரம் இல்லை நடப்பதை நிறுத்தாதே
வேறும் துளி தான் இங்கே கடலாகும் நம்பிக்கை தொலைக்காதே
மீண்டும் மீண்டும் பாதம் பட்டால் பாறை கூடப் பாதை ஆகும்
முன்னால் வைத்த காலை நீ பின்னால் எடுக்காதே
பூக்கள் பூக்க வேர்கள் தேவை வெற்றிக்கிங்கே வேண்டும் வேர்வை
உன் கை ரேகை தேய்ந்தா போகும் உழைப்பதை நிறுத்தாதே!

**- கவிஞர் அண்ணாமலை**

### பயிற்சி 2

கீழே கொடுக்கப்பட்டுள்ள கவிதையை வாசித்து, உமது சொந்த மொழிநடையில் விளக்கம் எழுதுக.

உயர்வைத் தருவது ஒழுக்கம் - அதை
ஊரும் உலகும் மதிக்கும்
தவறுதல் மனிதனின் பழக்கம் - அதை
உணர்ந்தால் மன்னிப்புக் கிடைக்கும்

நாணயம் நம்பிக்கை உழைப்பு - நம்
நாளைய உலகத்தில் மதிப்பு
நாட்டையும் வீட்டையும் மதித்து - நாம்
நடந்தால் உலகம் நமக்கு

**- கவிஞர் கண்ணதாசன்**


© 2020 Penerbitan Vetri Mayil (M) Sdn. Bhd.

## பிரிவு இ : செய்யுளும் மொழியணியும்
## கேள்விகள் 16 முதல் 19 வரை

### கேள்வி 16

**மொழியணி**

படிவம் 4, 5 இல் பரிந்துரைக்கப்பட்ட மரபுத் தொடர், உவமைத் தொடர், இரட்டைக் கிளவி, பழமொழி, இணைமொழி ஆகியவற்றிலிருந்து வினாக்கள் வினவப்படும். கல்வி அமைச்சுத் தயாரித்து வழங்கியுள்ள விளக்கவுரைக்கேற்பவே விடைகள் அமைந்திருக்க வேண்டும்.

**வினா வகைகள்**

1. கொடுக்கப்பட்டுள்ள செய்யுள், மொழியணிகளுக்குப் பொருள் விளக்கம் எழுதும் வகையில் அமையலாம்.
2. பொருளைக் கொடுத்து அதற்குப் பொருத்தமான செய்யுள், மொழியணிகளை எழுதச் சொல்லலாம்.
3. மொழியணிகளைப் பொருள் விளங்க வாக்கியங்களில் அமைத்துக் காட்டச் சொல்லலாம்.

**வாக்கியம் அமைத்தல்**

**கவனிக்க வேண்டியவை :**

கொடுக்கப்பட்டுள்ள மொழியணி வாக்கியத்தில் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் மொழியணி கூற வரும் செய்தி, விளக்கம், அதனால் ஏற்படும் விளைவு ஆகியவை எழுதப்பட்டிருந்தால் முழுப் புள்ளி கிடைக்கும்.

காட்டு :

**கரைத்துக் குடித்தல்**

மாணவர்கள் சிரத்தையோடு பாடங்களைக் கரைத்துக் குடித்து, நினைவில் வைத்திருந்தால் தேர்வில் எளிதாகப் பதில் அளிக்க இயலும்.

இந்த வாக்கியத்தில் மொழியணி, செய்தி, விளைவு ஆகிய மூன்றும் உள்ளன.

மொழியணி நேர்ப்பொருளில் வாக்கியத்தில் பயன்படுத்தியிருந்தால் 1 புள்ளி மட்டுமே வழங்கப்பெறும்.

காட்டு :

மாணவர்கள் தேர்வுக்காகப் பாடங்களைக் கரைத்துக் குடித்தனர்.

**பயிற்சி 1 (கேள்வி 16)**

கொடுக்கப்பட்டுள்ள மரபுத்தொடரைப் பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

**வெளுத்து வாங்குதல்**

.................................................................................................................................

.................................................................................................................................


© 2020 Penerbitan Vetri Mayil (M) Sdn. Bhd.

**பயிற்சி 2**

கொடுக்கப்பட்டுள்ள பொருளுக்கேற்ற பழமொழியை எழுதுக.

சம்பாதித்ததை மேலும் விருத்தி பண்ணாமல் சும்மாயிருந்து எடுத்துச் செலவு செய்தால், குன்று போல குவிந்திருந்த செல்வமும் நாளடைவில் இல்லாமல் போகும்.

........................................................................................................................................

........................................................................................................................................

**கேள்வி 17**

**செய்யுள்**

படிவம் 4, 5 இல் பரிந்துரைக்கப்பட்ட திருக்குறள், பல்வகைச் செய்யுள்கள் ஆகியவற்றிலிருந்து வினாக்கள் வினவப்படும். கல்வி அமைச்சுத் தயாரித்து வழங்கியுள்ள விளக்கவுரைக்கேற்பவே விடைகள் அமைந்திருக்க வேண்டும்.

**திருக்குறள்**

- திருக்குறளின் முதல் அடியின் பொருள் கேட்கப்படலாம். அல்லது இரண்டாவது அடியின் பொருள் கேட்கப்படலாம்.
- பொருளுக்கு ஏற்ற குறள் கேட்கப்படலாம்.
- குறளுக்கு ஏற்ற பொருள் கேட்கப்படலாம்.

**பல்வகைச் செய்யுள்கள்**

**வினா வகைகள்**

**கேள்வி 18**

- ஒரு செய்யுளடியின் பொருள் கேட்கப்படலாம்.
- செய்யுளின் முதல் இரண்டு / மூன்று அடிகள் கோடிடப்பட்டுப் பொருள் கேட்கப்படலாம்.
- செய்யுளின் இறுதி இரண்டு / மூன்று அடிகள் கோடிடப்பட்டுப் பொருள் கேட்கப்படலாம்.

**பயிற்சி 1**

கொடுக்கப்பட்டுள்ள மணிமேகலை செய்யுளடிகளின் பொருளை எழுதுக.

குடிப்பிறப் பழிக்கும் விழுப்பம் கொல்லும்

பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

 © 2020 Penerbitan Vetri Mayil (M) Sdn. Bhd.

**பயிற்சி 2**

கொடுக்கப்பட்டுள்ள செய்யுளுக்கான விளக்கத்தை எழுதுக.

**சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மைஅறம் கிடப்பத்**
**தாதவிழ்பூந் தாரான் தனிக்காத்தான் - மாதர்**
**அருகூட்டும் பைங்கிளியும் ஆடற் பருந்தும்**
**ஒருகூட்டில் வாழ உலகு (26)**

.................................................................................................................................................................................


.................................................................................................................................................................................

**கேள்வி 19**

- உரையாடல், உரை, கடிதம், உரைநடை, கதை, கட்டுரை, வடிவிலான ஒரு வாசிப்புப் பகுதி வழங்கப்பெறும்.
- அவற்றில் அடைப்புக்குறியில் மொழியணி (பழமொழி / மரபுத் தொடர் / உவமைத்தொடர்/ இணைமொழி / இரட்டைக் கிளவி / திருக்குறள்) எனக் குறிக்கப்பட்டிருக்கும்.
- மாணவர்கள் அந்தச் சூழலுக்கு ஏற்பப் பொருத்தமான மொழியணியை ஊகித்து எழுத வேண்டும்.

**பயிற்சி 1 (கேள்வி 19)**

கீழ்க்காணும் பனுவலில் அடைப்புக்குள் இருக்கும் இடங்களுக்குப் பொருத்தமான மொழியணிகளை எழுதுக.



இந்தியாவின் முன்னாள் அதிபர் இராமேஸ்வரத்திலுள்ள ஒரு சிறு தொடக்கப்பள்ளியில் தம் கல்வியைத் தொடங்கினார். அவரது குடும்பம் பாரம்பரியமாக ஏழைக் குடும்பமாகவே இருந்தது **(1 மரபுத் தொடர்)** குடும்ப வறுமையைக் குறைக்கச் சிறுவனாக இருந்த பொழுதே அவர் வேலைக்குச் சென்றார்.

இராமேஸ்வரத்தில் தம் பள்ளிப்படிப்பை முடித்துக்கொண்டு திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரியில் தமக்கு விருப்பமில்லாத இயற்பியல் துறையில் கல்வியைத் தொடர்ந்தார். இருப்பினும் என்றாவது ஒரு நாள் விண்வெளித் துறையில் மேற்கல்வியைத் தொடர்ந்து வல்லுநராக வேண்டுமென உறுதி எடுத்துக் கொண்டார். **(2 மரபுத் தொடர்)** அதன்படி அத்துறையில் அவர் முதுகலை பட்டம் பெற்றார். இந்தியாவின் விண்வெளி ஆய்வு மையத்தின் தலைவர் பொறுப்பில் அமர்ந்தார். இராமேஸ்வரம் சிற்றூரிலிருந்து புறப்பட்ட ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த அந்த மாணவர் இந்திய மக்களால் போற்றிப் புகழப்பட்டார். **(3 இணைமொழி)**

அவர் 2002–ஆம் ஆண்டு ஜூலை 25–ஆம் நாள் இந்தியாவின் 1–ஆவது அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்துல் கலாம் அவருடைய இராமேஸ்வரம் வாழ்க்கையை மறக்கவே இல்லை. அவர் வாழ்ந்த ஊர் மக்களை மறக்கவில்லை. அவருக்குக் கற்பித்த ஆசிரியர்களைப் புறம் தள்ளவில்லை. அதிபராக இருந்தாலும் ஆடம்பரத்தை வெறுத்தார். ஏழை எளிய மக்களிடம் அன்பு பாராட்டினார். மாணவர்களை நேசித்தார். மக்கள் அவரைப் போற்றிப் புகழ்ந்தனர். **(4 உவமைத் தொடர்)**

 © 2020 Penerbitan Vetri Mayil (M) Sdn. Bhd.

அன்பு மாணவர்களே, வணக்கம். மீண்டும் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி.
இம்முறை நாவல் பாகம் 2–இல் இடம்பெறுள்ள நெடுங்கேள்விகளைப் பற்றி ஆராய்வோம்.
நெடுங்கேள்விகளுக்கு 20 புள்ளிகள், 10 புள்ளிகள் என இரு வகையில் புள்ளிகள் வழங்கப்படுகின்றன.

**20 புள்ளி கேள்வி**

முன்னுரை, முடிவுரை இருக்க வேண்டும்.
குறைந்தது 5 கருத்துகள் - நாவலில் வரும் நிகழ்வுகளைத் தொடர்புபடுத்தி விளக்கி எழுத வேண்டும்.

**காட்டு :**


அகல்விளக்கு நாவலில் வேலய்யன் சந்திரன் மேல் கொண்டிருந்த நட்பின் ஆழத்தை ஆராய்க. (20 புள்ளி)

**10 புள்ளி கேள்வி**

முன்னுரை, முடிவுரை தேவையில்லை.
குறைந்தது 3 கருத்துகள் - நாவலில் வரும் நிகழ்வுகளைத் தொடர்புபடுத்தி விளக்கி எழுத வேண்டும்.

**காட்டு :**

i) அகல்விளக்கு நாவலின் துணைக்கருப்பொருள் மூன்றனை விளக்கி எழுதுக. (10 புள்ளி)
ii) பாக்கிய அம்மையாரின் பண்புநலன்களை விளக்கி எழுதுக. (10 புள்ளி)




 © 2020 Penerbitan Vetri Mayil (M) Sdn. Bhd.

**கவனத்தில் கொள்க.**

**பாத்திரப்படைப்புக்கும் பண்புநலனுக்கும் உள்ள வேறுபாடு**

**பாத்திரப்படைப்பு**

- படைப்பாளிக்கு முதன்மை
- கதைப்பாத்திரத்தைப் படைத்ததற்கான நோக்கம்
- கதைப்பாத்திரத்தை வைத்து கதையை நகர்த்தும் முறை

**பண்புநலன்**

- கதைப்பாத்திரத்தின் குணம்
- கதைப்பாத்திரத்தின் பண்பு வெளிப்படும் நிகழ்வுகள்

**பின்வரும் கேள்வியையும் பதிலையும் எடுத்துக்காட்டாகக் கொள்க.**

**கேள்வி : அகல்விளக்கு நாவல் உணர்த்தும் படிப்பினைகளை ஆராய்க.**

**பதில் : மாதிரிச் சட்டகம்**

- முன்னுரை
- நல்லொழுக்கத்தையும் மனக்கட்டுப்பாட்டையும் கடைப்பிடிக்க வேண்டும்.
- என்றும் நட்பைப் போற்ற வேண்டும்.
- கல்விச் செல்வத்தை விடா முயற்சியுடன் பெற வேண்டும்.
- வாழ்க்கையில் எதிர்நோக்கும் சவால்களையும் துன்பங்களையும் துணிவுடன் எதிர்நோக்க வேண்டும்.
- குடும்பத்தின் மீது குறைவிலாப் பாசம் கொள்ள வேண்டும்.
- முடிவுரை

**மாதிரிப் பதில்**

டாக்டர் மு.வ. வெறும் பொழுதுபோக்கிற்காக எழுதும் படைப்பாளியன்று. அவர் தம்முடைய படைப்புகள் மானுடனின் வாழ்க்கை நெறிக்குத் துணையாகவும் வழிகாட்டலாகவும் இருக்க வேண்டும் என்பதில் ஓர் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டவர். அவரின் கட்டுரைகளும் கதைகளும் அதனைத் தெளிவாகவே காட்டியுள்ளன. அந்த வகையில் சாகித்திய அகடமி பரிசு பெற்ற அகல்விளக்கு நாவல் உச்சத்தில் நிற்கிறது. நாவலின் கருப்பொருளும் துணைக் கருப்பொருளும் மாந்தனுக்குரிய பல படிப்பினைகளை வழங்குகின்றன. ஏன், நாவலின் தலைப்பே நாம் எப்படி வாழ வேண்டும் எனும் படிப்பினையைச் சொல்லுகிறது.

 © 2020 Penerbitan Vetri Mayil (M) Sdn. Bhd.

நாவலாசிரியர், நல்லொழுக்கமும் மனக்கட்டுப்பாடும் ஒவ்வொருவருக்கும் அவசியம் என்பதை வேலய்யன், சந்திரன் முதலிய கதைப்பாத்திரங்களின் வழி நமக்கு உணர்த்துகிறார். நற்பண்புடைய வேலய்யனை அகல்விளக்காகவும் வாழ்க்கையில் தடம் புரண்ட சந்திரனைச் சிட்டம் பிடித்த பித்தளை விளக்காகவும் காட்டி, ஒழுக்கம் உயர்வைத் தரும் எனும் படிப்பினையை நமக்குச் சொல்லுகிறார்.

ஒழுக்கத்துடன் வாழ வேண்டும் எனும் சிந்தனையை நாவல் முழுவதும் வலியுறுத்துகிறார். இதற்கு எடுத்துக்காட்டாகச் சந்திரன் படைக்கப்பட்டுள்ளான். சந்திரன் கல்லூரியில் படிக்கும் பொழுது மனக்கட்டுப்பாட்டை இழக்கிறான். பெருங்காஞ்சி கிராமத்தில் பல பெண்களின் வாழ்க்கையைச் சீரழிக்கிறான். மனைவியின் இறப்பிற்குப் பிறகு ஊரைவிட்டு ஓடுகிறான். அப்பொழுதும் மனம் திருந்தி வாழாது பல பெண்களுடன் முறையற்ற உறவு கொள்கிறான். இதனால், தொழுநோய்க்கு ஆளாகிறான். சந்திரனின் ஒழுக்கமற்ற வாழ்க்கை அவன் குடும்பத்திற்குப் பெரும் களங்கத்தை ஏற்படுத்துகிறது. அறிவும் அழகும் இருந்தும் ஒழுக்கம் இல்லாத காரணத்தால்தான் சந்திரனின் வாழ்க்கை சீரழிகிறது. எனவே, நாமும் வாழ்க்கையில் நெறி பிறழாது ஒழுக்கத்தை உயிர்மூச்சாகக் கொண்டு வாழ வேண்டுமென்கிறார்.

நாவலாசிரியர் நட்பைப் போற்றி வாழவேண்டும் எனும் கருத்தை உறுதிப்படுத்துகிறார். சான்றாக, வேலய்யன் உயர்நிலைப்பள்ளியில் சந்திரனுடன் உருவான நட்பை இறுதிவரை போற்றுகிறான். கிராமத்தில் பல பெண்களுடன் உறவு வைத்துக் கொண்ட சந்திரனை ஒரு தொழுநோயாளியாகக் காண்கிறான். அவனைக் கண்டு வேலய்யன் சிறிதும் அருவருப்புக் கொள்ளவில்லை. சந்திரனைத் தன் இல்லத்திற்கு அழைத்துச் சென்று அடைக்கலம் கொடுத்துத் தேவையான வசதிகளைச் செய்து தருகிறான். அவன் இறந்த பிறகு, கொடுத்த வாக்கின்படி இறுதிச் சடங்குகளையும் செய்து முடிக்கிறான். வேலய்யன் போல நாமும் நட்பு எனும் புனித உறவைப் போற்றிக் காக்க வேண்டுமென நாவலாசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தொடர்ந்து, நாவலாசிரியர் கல்விச் செல்வத்தைப் பெற முயல வேண்டும் என்ற படிப்பினையை இந்நாவல் மூலம் உணர்த்தியுள்ளார். கல்வி எனும் அழியாச் செல்வமே வாழ்வின் ஒளியாகக் கருதப்படுகிறது. அவ்வகையில், வேலய்யன் கல்விச் செல்வத்தைப் போற்றுபவனாகத் திகழ்கிறான். வேலய்யன் கல்வியால்தான் வாழ்க்கையில் உயர்ந்தான். உயர்நிலைப்பள்ளியில் சந்திரனைவிடப் படிப்பில் சுமாராக இருக்கிறான். 'நிமோனியா' காய்ச்சலால் பாதிக்கப்பட்டதால் தேர்வில் தோல்வி கண்டாலும் விடாமுயற்சியுடன் படித்துத் தேறிக் கல்லூரியில் நுழைகிறான். கல்லூரியிலும் சுயக்கட்டுப்பாட்டை வளர்த்துக் கொண்டு கல்வியில் கண்ணுங்கருத்துமாகப் படித்து பி.ஏ. தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி அடைகிறான். வேலய்யனின் சிறந்த கல்வி அடைவுநிலையே அவனுக்கு அரசாங்கத்தில் கூட்டுறவுத் துணைப்பதிவாளர் வேலையைப் பெற்றுத் தந்தது. ஆகவே, உயர்வான கல்வியே நிறைவான வாழ்க்கைக்கு வழிவகுக்கும் என்ற படிப்பினையை நாவலாசிரியர் வேலய்யன் மூலம் உணர்த்த விழைகிறார்.

மேலும், நாவலாசிரியர் வாழ்க்கைப் போராட்டங்களைத் துணிவுடன் எதிர்நோக்க வேண்டும் என்ற படிப்பினையையும் அகல்விளக்கு நாவலின் மூலம் நமக்கு வழங்கியுள்ளார். நாவலாசிரியர், சந்திரனை இதற்கு உதாரணமாகக் காட்டியுள்ளார். சந்திரன் தன் வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களைத் துணிவுடன் எதிர்கொள்ளும் திராணி

 © 2020 Penerbitan Vetri Mayil (M) Sdn. Bhd.

இல்லாதவனாக இருக்கிறான். கல்லூரியில் இமாவதி என்ற பெண்ணுடன் ஒருதலைக் காதல் கொள்கிறான். பிறகு, அந்தப் பெண் வேறொருவனுடன் திருமணம் செய்து கொள்ளப் போகிறாள் என்ற செய்தியை அறிந்து மனமுடைந்து போகிறான்; கல்லூரியைவிட்டுத் தலைமறைவாகிறான். மேலும், தன் மனைவி வள்ளியின் மறைவிற்குத் தானே காரணம் என்று எண்ணி ஊரைவிட்டு ஓடுகிறான். அவனுக்கு எதிர்மாறாகப் பாக்கிய அம்மையார் விளங்குகிறார். கணவர் துணையில்லாமல் தனிமரமாக வாழ்ந்தாலும் வாழ்க்கைச் சிக்கல்களைத் துணிவுடன் எதிர்கொண்டு பிறருக்கும் தொண்டுகள் புரிகிறார். எனவே, நாவலாசிரியர் இவ்விரு கதைப்பாத்திரங்களின் மூலம் நம்மைச் சிந்திக்கச் செய்து துணிவுடன் சவால்களைச் சமாளிக்கும் வகையில் செயல்படத் தூண்டுகிறார்.

நாவலாசிரியர், குடும்ப உறுப்பினர்களின் மீது குறைவிலாப் பாசம் கொள்ள வேண்டும் என்ற கருத்தினையும் முன் வைத்துள்ளார். இதற்கு முன்னுதாரணமாக வேலய்யனைப் படைத்துள்ளார். முதுகில் கட்டி வந்ததால் தனது மளிகைக் கடையைக் கவனித்துக் கொள்வதில் சிரமத்தை எதிர்நோக்கிய தனது தந்தையின் சிரமத்தைப் புரிந்து கொண்டு அவருக்கு ஓய்வு கொடுத்துத் தானே கடை வியாபாரத்தைக் கவனித்துக் கொள்கிறான். அதுமட்டுமல்லாது, தன் தங்கை மணிமேகலை எளிய வாழ்க்கை வாழ்வதைக் கண்டு அவளுக்கு உதவி புரியும் வகையில் தையல்பொறி வாங்கிக் கொடுத்துக் குடும்ப வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள எண்ணம் கொள்கிறான். எனவே, ஒவ்வொருவரின் வாழ்க்கைக்கும் மகிழ்ச்சியான குடும்பமே அடிப்படையாக இருப்பதால் குடும்ப உறுப்பினர்களின் நலத்தில் அக்கறை கொண்டு வாழ வேண்டுமென நாவலாசிரியர் நமக்கு உணர்த்துகிறார்.

ஆகவே,

“இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார் வாய்ச் சொல்”

என்ற பொய்யாமொழிப் புலவரின் அமுத வாக்கிற்கொப்ப அகல்விளக்கு நாவலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள படிப்பினைகளை நாம் வாழ்க்கையில் கடைப்பிடித்தால் சிறந்தோங்கி வாழலாம் என்பது வெள்ளிடைமலை.

**10 புள்ளிக்கான மாதிரிக் கேள்வியும் பதிலும்**

**கேள்வி : மாலனின் பண்பு நலன்களை விளக்கி எழுதுக.**

**பதில் : மாதிரிச் சட்டகம்**

- மூட நம்பிக்கை கொண்டவன்
- குடும்பப் பொறுப்பு இல்லாதவன்
- செய்த தவற்றை உணர்ந்து வருந்துபவன்

 © 2020 Penerbitan Vetri Mayil (M) Sdn. Bhd.

**மாதிரிப் பதில்**

மாலன் மூடநம்பிக்கை கொண்டவனாக இருக்கிறான். கல்லூரியில் படிக்கும் பொழுதே ரிஷியின் பெயரை எழுதுவது, இஷ்ட சித்தி குளிகைகளைக் கையில் கட்டிக் கொள்வது போன்ற மூட நம்பிக்கைகளில் ஆழ்ந்திருக்கிறான். கல்லூரி வாழ்க்கை முடிந்து சுயமாகத் தொழில் தொடங்கும் காலக்கட்டத்திலும் மாலனின் மூடநம்பிக்கை தொடர்கிறது. ஆவிகளுடன் பேசும் சாமியார், பித்தளையைத் தங்கமாக மாற்றும் நண்பர் எனப் பல ஏமாற்றுப் பேர்வழிகளின் பின்னால் சென்று பணத்தைக் கரைக்கிறான்; கற்பகத்தின் நகைகளையும் அழிக்கிறான். இதனால், இல்லற வாழ்க்கையில் சிக்கலை எதிர்நோக்கிக் கற்பகத்தைப் பிரிந்து வாழும் நிலைக்கும் ஆளாகிறான். வாழ்க்கையில் முன்னேற உழைப்பை நம்பாமல் குறுக்கு வழியில் வெற்றி காண மாலன் நினைத்ததற்கு அவனது மூடநம்பிக்கையே அடிப்படைக் காரணமாக அமைந்தது.

இதுமட்டுமல்லாது, மாலன் பணத்தாசை மிக்கவனாகவும் குடும்பப் பொறுப்பு இல்லாதவனாகவும் உள்ளான். கல்லூரிப் படிப்புக்குப்பின் மாலனுக்கு எங்கும் வேலை கிடைக்காததால் வேலய்யனின் உதவியை நாடுகிறான். வேலய்யனும் அவனுக்குக் கூட்டுறவுத்துறையில் வேலை வாங்கித் தருகிறான். ஆனால், சம்பளம் குறைவாக உள்ளதைக் காரணங்காட்டி அவ்வேலையிலிருந்து நீங்கிச் சுயத்தொழில் செய்யத் துணிகிறான். குறுகிய காலத்திலேயே பணம் சம்பாதித்துவிட வேண்டும் என்ற தீவிரத்தில் நெல் ஆலையைத் திறக்க முடிவெடுக்கிறான். பழக்கம் இல்லாத துறையாக இருப்பதால் அவசரப்படாமல் செயல்படுமாறு வேலய்யன் அவனுக்கு அறிவுறுத்தியும் அதற்குச் செவி சாய்க்காது செயல்படுகிறான். தொழிலில் பணப் பற்றாக்குறை ஏற்பட்ட நிலையில் கற்பகத்தைத் தன் தந்தை சாமண்ணாவிடம் சென்று நிலத்தை விற்றுப் பணம் கொடுக்கச் சொல்கிறான். ஆனால், சாமண்ணா பரம்பரை நிலத்தை விற்க மறுக்கிறார். கேட்டபடி பணம் வராததால் கற்பகத்தை அவள் தந்தை வீட்டிலேயே விட்டுவிடுகிறான். பணமே தனக்கு முக்கியம் என்ற நிலையில்தான் மாலன், கர்ப்பிணிப் பெண் என்றும் பாராமல் செயல்படுகிறான். பொறுப்புள்ள கணவனாக இல்லாமல் இரண்டு வருடங்கள் மனைவியையும் குழந்தைகளையும் பிரிந்து வாழ்கிறான். இதனால் கற்பகம் பெரும் மனத்துன்பத்தை எதிர்நோக்குகிறாள்.

இருப்பினும், மாலனிடத்தில் செய்த தவற்றை உணர்ந்து வருந்தும் நல்ல குணம் உள்ளது. தொழிலில் பணப்பற்றாக்குறையை எதிர்நோக்கிய மாலன் வேலய்யனிடம் பணவுதவியை எதிர்பார்க்கிறான். தன் தங்கைக்குத் தையல்பொறியை வாங்கிக் கொடுக்க பணத்தை வைத்திருந்த வேலய்யன், நட்பின் காரணமாக அப்பணத்தை மாலனுக்குக் கொடுத்து உதவுகிறான். இரண்டு வருடங்கள் ஆகியும் மாலன் அப்பணத்தைத் திருப்பிக் கொடுக்காமல் இருக்கிறான். இருப்பினும், இறுதியில் தான் கடனாகப் பெற்ற பணத்தை ஏமாற்றாமல் திருப்பிக் கொடுக்கிறான். கடனைச் செலுத்தாமல் வேலய்யனைச் சந்திக்க மனம் இடம் கொடுக்காததால்தான் அவனைப் பார்க்காமல் இருந்ததாகக் கடிதமும் எழுதித் தன் நிலையை விளக்குகிறான்.

 © 2020 Penerbitan Vetri Mayil (M) Sdn. Bhd.

## தாள் 1

### பயிற்சி 1

**வாதக் கட்டுரையை ஆதரித்தல்**

1. குடும்பத்தின் பொருளாதாரத்தை உயர்த்த முடியும்.
2. குடும்பத்தின் வாழ்க்கைத் தரம் உயரும்.
3. பெண்கள் குடும்பத்தைத் துணிச்சலாக வழிநடத்த இயலும்.
4. பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்குத் துணை நிற்க முடியும்.
5. பிறரின் உதவியை எதிர்பார்த்து வாழத் தேவையில்லை.
6. பிற ஏற்புடைய கருத்துகள்

**வாதக் கட்டுரையை நிராகரித்தல்**

1. பிள்ளைகளை முழுமையாகச் கவனிக்க இயலாது.
2. குடும்பத்தில் கணவன் மனைவி உறவில் சிக்கல் ஏற்படும்.
3. வீட்டு வேலைகளை முழுமையாகச் செய்து முடிக்க முடியாது.
4. பெண்களுக்கு மன அழுத்தம் மற்றும் நோய்கள் ஏற்படும்.
5. பிறரின் தூற்றலுக்கு ஆளாகக்கூடும்.

**முடிவுரை**

தலைப்பை ஒட்டி, வெட்டிக் கூறப்படும் கருத்துகளுக்கு ஏற்ற முடிவுரை.

## தாள் 2

### கேள்வி 15

### பயிற்சி 1

- அடையவிருக்கும் வெற்றி இலக்கு வெகு தூரமில்லை.
- வெற்றியடைய எடுக்கும் முயற்சிகளைத் தொடர்ந்து செயல்படுத்து.
- சிறுசிறு முயற்சிகள்தாம் நாளடைவில் பெரிய வெற்றியைக் கொண்டுவரும் என்று நம்பிக்கை கொள்ள வேண்டும்.
- தொடர்ந்து முயற்சி செய்தால் கடினமான செயல்கள் கூட எளிதாக மாறிவிடும்.
- முயற்சியைக் கைவிடாமல் தொடர்ந்து செய்ய வேண்டும்
- மரம் செழிப்பாக வளர வேர்கள் அடித்தளமாக அமைவது போல உழைப்பே வெற்றிக்கு அடித்தளம்
- உழைப்பதால் எவ்விதத் தீங்கும் விளையாது; உழைப்பதை நிறுத்த வேண்டாம்
  (மேலேயுள்ள ஏதேனும் 5 கருத்துகள் இருக்க வேண்டும்)

 © 2020 Penerbitan Vetri Mayil (M) Sdn. Bhd.

**பயிற்சி 2**

- ஒழுக்கம் நமக்கு உயர்வைத் தரும்.
- ஒழுக்கமாக உள்ளோரை இந்த உலகம் மதிப்பது வழக்கம்.
- மனிதன் தெரிந்து தவறு செய்வது கிடையாது. தவறு செய்வது மனிதர்களின் இயல்பான குணங்களில் ஒன்றாகும்.
- தான் செய்வது தவறு என்பதை அறிந்தவுடனே மன்னிப்புக் கேட்கும் பழக்கத்தை மனிதன் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகும். அப்படிக் கேட்பவர்களுக்கு மன்னிப்புக் கிடைத்துவிடும்.
- நாணயம், நம்பிக்கை, உழைப்பு ஆகிய மூன்றும் இருந்தால் நாளைய உலகில் நாம் மதிக்கப்படுவோம்.
- நமக்கான உலகில் நாட்டையும் வீட்டையும் நாம் முதலில் போற்றி நடந்தால் உலகம் நமக்குச் சொந்தமாகும்.

**பயிற்சி 1 கேள்வி 16**

அறுசுவை உணவு வகைகளைச் சுவையாகச் சமைக்கும் ஆற்றல் தனக்கு இருப்பதாகக் கூறி உணவகத்தில் வேலைக்குச் சேர்ந்த அண்ணாமலை சமைக்கத் தெரியாமல் தடுமாறிய போது அவருடைய **சாயம் வெளுத்தது.**

**கேள்வி 17**

குந்தித் தின்றால் குன்றும் மாளும்.

**கேள்வி 18**

பல்வகைச் செய்யுள்

**பயிற்சி 1**

பசி என்னும் பிணி ஒருவரின் மரபுவழி வந்த தகுதிகளையும் அழித்து விடும். ஒருவரின் தூய்மையான பண்புகளையும் ஒழித்து விடும்.

**பயிற்சி 2**

மலர்மாலை அணிந்த நளமன்னன் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஓர் ஆட்சியை நடத்தி வந்தான். மகளிர் பாலும் பழமும் ஊட்டி வளர்க்கும் பச்சை நிறக் கிளியும் அதனைக் கொன்று தின்னும் பருந்தும் ஒரே கூண்டில் பகைமை நீங்கி வாழும்படியான ஒரு சூழல் நளன் ஆட்சி புரிந்த நாட்டில் இருந்தது. புகழேந்தி புலவர் நளன் ஆட்சியை அறம் நிறைந்த ஆட்சி என்றும் குளிர்ந்த நிலவு தரும் இதமான ஆட்சி என்றும் வருணிக்கிறார்.

**பயிற்சி 1 (கேள்வி 19)**

1. தொன்று தொட்டு
2. கங்கணம் கட்டுதல்
3. பேரும் புகழும் / சீரும் சிறப்பும்
4. குன்றின் மேலிட்ட விளக்குப் போல

 © 2020 Penerbitan Vetri Mayil (M) Sdn. Bhd.

## இயங்கலை வழி கற்றல்

தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியில் பிறந்த கல்வித்துறையின் நவீன தளம்தான் இயங்கலை கற்றல். இயங்கலை கற்றல் ஆங்காங்கே தலைதூக்கிக் கொண்டிருந்தாலும் வகுப்பறைக் கற்றலே முழுமையாக ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த இவ்வேளையில், கோவிட்-19 பெருந்தொற்று இயங்கலை வழி கற்றலைக் கோலோச்சச் செய்திருக்கிறது.

இப்பெருந்தொற்றால் பள்ளிகளின் கதவுகள் மூடப்பட்டன. நேரடிக் கற்றலைத் தவிர்க்க நினைத்து இயங்கலைக் கற்றலை அரசு வலியுறுத்தியது. இதனால் வீட்டிலிருந்து கொண்டே கற்றலை மேற்கொள்ள முடிந்திருக்கிறது. கற்றலுக்குத் தளமாக இருந்த தொடக்கப் பள்ளி முதல் உயர்நிலைக் கல்வி வரை அனைத்து நிலைகளுக்கும் பதிலாக இயங்கலை தளமாக மாறியது. எனவே, ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் பாடங்களை இயங்கலை வழி கற்பித்தனர்.

இயங்கலைக் கற்றல் வழி ஓர் ஆசிரியர் ஒரே சமயத்தில் பல நூறு மாணவர்களுக்குக் கற்பிக்க முடிகிறது. இயங்கலை வழி எண்ணற்ற ஆசிரியர்களும் மாணவர்களும் ஓர் இணைப்பில் இணைய முடியும். இதனால் ஓர் ஆசிரியர் பல நூறு மாணவர்களுடன் தொடர்பு கொள்ள முடிகிறது. ஒரே பாடத்தை எவ்விதச் சிரமுமின்றிப் பல மாணவர்களுக்கு அவரால் போதிக்க முடிகிறது. அதுமட்டுமன்று, உலகில் பல இடங்களில் இருக்கும் சிறந்த ஆசிரியர்களிடமிருந்து பாடம் கேட்டுப் பயில முடிகிறது. சிறந்த ஆசிரியர்களிடமிருந்து மிகச் சிறந்த போதனைகளைப் பெற மாணவர்களுக்குத் துணையாக இருக்கிறது. இயங்கலைக் கற்றல், ஆசிரியர் மாணவர் என இரு பிரிவினருக்கும் நன்மை பயக்கும் வல்லமையைப் பெற்றுள்ளது.

மேலும், 21ஆம் நூற்றாண்டிற்கான கற்றல் கற்பித்தலில் தொழில்நுட்பத்தின் பங்களிப்பு அளப்பரியது. கற்றல் கற்பித்தலில் காணொளி, தரவுச் சான்று, முப்பரிமாணப் படங்கள் முதலியவற்றின் பயன்பாட்டால் மாணவர்களுக்குப் பாடத்தில் ஈர்ப்பை ஏற்படுத்த முடிகிறது. பள்ளிகளிலும் இவற்றின் பங்களிப்பு இடம்பெற்றிருப்பினும் இயங்கலைக் கற்றலில் இத்தகைய தொழில்நுட்பத்தின் முழுமையான பயன்பாட்டால் போதனைகள் மேன்மேலும் சுவாரசியம் பெற்றுள்ளன. ஆகவே, மாணவர்கள் பாடங்களை எளிமையாகவும் தெளிவாகவும் புரிந்து கொள்ள இவை துணை நிற்கின்றன.

ஒரு மாணவன் தனது சொந்த ஆற்றலுக்கேற்ற வேகத்தில் இயங்கலை வழி கற்க முடிகிறது. நொடிக்கு நொடி தகவலைப் பெற்றுத் தன்னைத் தானே புதுப்பித்துக் கொள்ளும் இணையத்தால் மாணவர்கள் மேலதிகத் தகவலை உடனுக்குடன் பெற முடிகிறது. ஆசிரியரின் தெளிவுரைபோல் இணையத்தின் விளக்கங்களும் தற்போதைய சூழலுக்கு ஏற்ப அமையப்பெறுவதால் மாணவர்கள் இயங்கலைக் கற்றலால் மிகுந்த நன்மை அடைந்து வருகின்றனர். இதன்வழி, மாணவர்கள் அமர்ந்த இடத்திலிருந்து நுனி விரலில் அனைத்தையும் கற்றறிந்து கொள்ள முடிகிறது.

இருப்பினும், நீருக்கு நுரை இருப்பது போலவும் பூவிற்குப் பூவிதழ் இருப்பது போலவும் நன்மைகளை அள்ளி இரைக்கும் இயங்கலைக் கற்றலினால் சில சிக்கல்களும் உள்ளனவே. இணைய வசதி, கணினி வசதி, விவேகத் தொலைபேசி இல்லாதவர்களுக்கு இயங்கலை வழி கற்றலை மேற்கொள்வதில் சிரமம் ஏற்படலாம். வசதி குறைந்த மாணவர்கள், கிராமப்புறங்களில் வசிக்கும் மாணவர்கள் இச்சிக்கல்களை எதிர்கொள்வர். இதனைக் களைய அரசு வசதி குறைந்தவர்களுக்குக் கணினி வசதியையும் இணைய வசதியையும் ஏற்படுத்திக் கொடுத்தது குறிப்பிடத்தக்கது. சில உயர்கல்விக் கழகங்கள் தம் மாணவர்களுக்கு இலவச இணைய வசதியையும் அமைத்துக் கொடுத்துள்ளது. ஆகவே, இயங்கலைக் கற்றலை அனைத்துத் தரப்பும் ஆதரித்து வருவது வழக்கமாகி வருகிறது.

'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்பதற்கேற்பக் கல்வித் துறையில் ஏற்படும் மாற்றங்களை ஏற்க ஆசிரியர்களும் மாணவர்களும் தயாராக வேண்டும். இதன்வழி மூடிய கதவுகளுக்குப் பின் நடக்கும் இயங்கலைக் கற்றலைப் போல் எவ்விதச் சூழலிலும் கல்வி என்னும் சுடர் என்றும் ஒளிவிட்டு எரிய முடியும்.


© 2020 Penerbitan Vetri Mayil (M) Sdn. Bhd.